பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

அஹமதி தமிழ் திருச்சபை

# "ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்."

யாக்கோபு 4:7

செய்தி மலர்
2023
மே

இதழ் : 01
மலர் : 20



# சபை செயலாளர் அன்பு மடல்



**"தேவனுக்கு கீழ்ப்பபடிந்திருஙங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்."**

**கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தேத்திரமுண்டாவதாக. கடந்த நான்கு மாதங்களும் நம்மை கண்ணின் மணிபோல் பாதுகாத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரமுண்டாவதாக. இனிமேலும் நம் ஒவ்வொருவரையும் தேவன் பாதுகாத்து நடத்துவார் என்கிற விசுவாசத்தோடு முன்னேறி செல்வோம்.**

**நம்முடைய வாழ்க்கை பயணத்தில் நாம் முன்னேற கூடாதபடிக்கு தடைகளையும், கட்டுகளையும் பிசாசு உண்டாக்குகிறான். தேவனோ, ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறார்.**

**"ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்." (யாக் 4:7).**

**நம்மை சிருஷ்டித்த தேவனே வாழ்க்கைப் பாதையை நமக்கு அமைத்துக் கொடுத்தவர். அவர் அமைத்துக் கொடுக்கிற வாழ்க்கை பாதையில் நாம் பயணம் தொடரும் போது, பொல்லாதவன் வந்து குறுக்கிட்டால் அவனைத்துரத்தவும், அவனை நம்முடைய வழியை விட்டு அகற்றவும், நமக்குத் தேவையான வல்லமையும் அதிகாரத்தையும் தருபவரும் தேவனே. எனவே, நம்மை நாமே சரிசெய்து, " நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து என் வாழ்க்கை ஓட்டத்தை தொடரவேண்டும் தேவ சித்தத்தின் பாதையிலே எந்த பொல்லாத சாத்தான் எதிர்த்தாலும் இயேசுவின் நாமத்தில் அவனை துரத்தும்போது அவன் ஓடியே போவான். பிசாசுக்கு எதிர்த்து நிற்பதுதான் தேவ ஜனத்திற்கு தேவன் தந்திருக்கும் அதிகாரம்.**

பிசாசுக்கு எதிர்த்து நின்று அவனைத்துரத்த, கீழ்காணும் காரியங்களில் தேவனுக்கு கீழ்படிய வேண்டும். தேவனுக்கு கீழ்படிய வேண்டும் என்றால் – தேவ சித்தத்துக்கு – தேவ வசனத்துக்கு– தேவ கட்டளைக்கு கீழ்படியவேண்டும்.

## 1.தேவ சித்தத்துக்கு கீழ்படியுங்கள்:

நாம் தேவனுடைய சித்தத்துக்கு கீழ்படிய வேண்டும். தேவன் நமது வாழ்க்கையை குறித்து ஒரு சித்தத்தை அல்லது நோக்கத்தை தனக்குள்ளே வைத்திருக்கிறார். அதை விட்டு விலகிபோகும் போதுதான் பாதுகாவலையும், அதிகாரத்தையும், உரிமையையும் நாம் இழந்து தவிக்கிறோம்". நான் கிறிஸ்து இயேசுவினாலே எதற்காய் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துகொள்ளும்படியாய் தொடருகிறேன். பிலி 3:12 என்று ஒரு காலத்திலே பலதிட்டங்களை வைத்துக்கொண்டு, தன் இஷ்டப்படி ஓடிக்கொண்டிருந்த பவுல் தமஸ்குவுக்கு போகிற வழியிலே இயேசு கிறிஸ்த்துவால் பிடிக்கப்பட்டு இயேசுவை இரட்சகர் என்று அறிந்து ஏற்றுக்கொண்டு தேவ சித்தத்துக்கு தன் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தான். தேவ சித்தம் நிறைவேற்றும் பாத்திரமானான். ஐசுவரியமானாலும் மேன்மையானலும், இயேசு உங்களுக்கென்று எதை வைத்திருக்கிறாரோ அதை ஏற்ற வேளையில் தவறாமல் தருவார். அதற்காக ஆசைப்பட்டு, வாழ்க்கையெல்லாம் சொப்பனம் கண்டு, கற்பனை செய்து அதற்க்காகவே நம்முடைய ஜெபத்தையும், ஜெப நேரத்தையும் செலவு பண்ணவேண்டியதில்லை அதற்கு பதிலாக "இயேசுவே என்னை ஒரு மனிதனாய் இந்த உலகத்தில் படைத்தீரே. என்னை ஒரு குடும்பமாக்கினீரே" என்று அவருடைய கிருபையை நினைத்து அவருடைய சித்ததுக்கு நம்மை ஒப்புகொடுப்போம்

## 2.தேவ வசனத்துக்கு கீழ்ப்படியுங்கள்:

என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன் என்ற வசனத்தின்படி கர்த்தருடைய வசனத்தை வாசித்து அதில் சொல்லப்பட்டிருப்பவைக்கு கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய வார்த்தையை கடமைக்காக அல்ல. அமர்ந்திருந்து, தெளிவுடனும், நிதானத்துடனும் கவனமாக வாசிக்க வேண்டும். வசனத்தின் படி வாழ தேவனே பெலன் தருவார். வசனத்துக்கு கீழ்ப்படிபவரின் வாழ்க்கையில் சாத்தான் வரமாட்டான்.

## 3.தேவ கட்டளைக்கு கீழ்ப்படியுங்கள்:

பழைய ஏற்பாட்டு காலமுதலே தேவன் மனிதனோடு இடைபடும் போதெல்லாம் கீழ்படிய வேண்டிய அநேக கட்டளைகளை மனிதனுக்கு

திட்டமாய் சொல்லியிருக்கிறார். இதை செய்யென்றும், இதை செய்யாதே என்று சொல்லப்பட்டுள்ள அநேகம் கட்டளைகள் உண்டு. இதிலே நாம் கவனமாய் இருக்க வேண்டும். கர்த்தர் ஆதாம் ஏவாளுக்கு முழு பூமியையும் அனுபவிக்க கொடுத்துவிட்டு, நீ நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கக்கூடாது என்று கட்டளையும் கொடுத்தார். அந்த கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டிய மனிதன் கீழ்ப்படிய தவறியதால் அவனுக்கு இழப்பு வந்தது, கஷ்டம் வந்தது. கட்டளைக்கு கீழ்படியாதவன் தோட்டத்தை இழந்தான். அடுத்தடுத்த காலகட்டங்களில் தேவன் சில ஒழுங்குகள், நியமங்கள், கட்டளைகளை கொடுக்கிறார், தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் நான் ஜெபிக்கிறேன், வேதம் வாசிக்கிறேன் என்றாலும் பயனொன்றுமில்லை. சத்துருவை ஜெயிக்க முடியாது. தேவ கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடந்தால் நம் வாழ்க்கை வெற்றி பாதையில் முன்னே செல்லும்.

## பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்:

"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே." 1பேதுரு 5:8,9.

தேவன் வகுத்த பாதைக்குள் தேவபிள்ளை இருக்கும் போது சாத்தானால் ஒன்றும் செய்ய முடியாது. பயம், கெட்ட நடக்கைகள், இச்சைகள், பெருமைகள் போன்றவை சாத்தானுக்கு வழி திறந்து கொடுக்கிறது. இவைகளை கவனித்து கொள்ள வேண்டும்.

## தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்க்கள்:

சாத்தானுடைய பயமுறுத்தலுக்கு தப்பி ஜெயம் பெற வேண்டுமானால் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். சாத்தான் ஒரு தவறான சிந்தனையை கொண்டுவரும்போது இது உண்மையா? தேவ வசனம் இப்படிதானே சொல்லுகிறது. அப்படியானால் நான் ஏன் பயப்படவேண்டும்? என்று வசனத்தின் அறிவினால் வருகிற தெளிந்த புத்தியை கொண்டு சாத்தானின் பயமுறுத்தல்களுக்கு தப்பலாம். தெளிந்த புத்தியுடன் சூழ்நிலையை உற்றுநோக்கும் போது மட்டுமே காரியங்களை புரிந்து கொள்ள முடியும். கலகத்துக்கும், பயத்துக்கும் ஒருபோதும் இடம் கொடுக்க கூடாது.

## விழித்திருங்கள்:

தினமும் ஜெபம் பண்ணுதல், நமது காரியங்களை ஒளிவு மறைவில்லாம் ஆண்டவரோடு பேசுதல், நாம் செய்வதும், வாழ்க்கை என்பவைகள் இருந்தால் மட்டுமே நாம் விழித்திருக்கிறவர்களாக காணப்பட முடியும். நாம் தேவனோடு பேசும்போது அவரும் நமக்கு ஆலோசனைகளை தந்துகொண்டேயிருப்பார். விழித்திருந்து ஜெபம் பண்ணும்போது சாத்தானால் நம்மை ஒன்றும் செய்யமுடியாது.

**விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள்:**

தேவன் ஒருவர் உண்டு. அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலனளிக்கிறார் என்கிற விசுவாசம் நம் உள்ளத்தை நிரப்பி இருக்க வேண்டும். "நான் தேவனை தேடுகிறதினால் தேவன் என்னை கைவிடமாட்டார், என்னை தோல்விக்கு ஒப்புக் கொடுக்கமாட்டார், நான் நம்புகிறது அவராலே வரும் என்ற அறிக்கைகள் செய்து விசுவாசத்தில் உறுதியாய் இருந்து பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும்.

பிசாசு தன்னை வஞ்சிக்கிற தந்திரங்களால் நம்மை சேதப்படுத்த முயற்ச்சிக்கிறான். பிசாசின் தந்திரத்தை ஜெயிக்க தேவனுடைய சர்வாயுதத்தை தரித்துக்கொள்ள வேண்டும்.

### 1.சத்தியம் என்னும் கச்சை. எபே 6:14

வசனத்தை தெளிவாக கற்று தேவனுடைய உபதேச சத்தியத்தில் உறுதியாயிருக்கும் போது பிசாசின் தந்திரத்தினால் அலைக்கழிக்கப்படாமல் நிமிர்ந்து நிற்க முடியும்.

### நீதி என்னும் மார்க்கவசம். எபே 6:14

தேவ நீதியை மார்க்கவசமாக அணிந்து கொள்ளும்போது ஆவிக்குரிய ஜீவியம் பிசாசின் தாக்குதலினால் சேதப்படாது.

### ஆயத்தம் என்னும் பாதரட்சை. எபே 6:15

இரட்சிக்கப்பட்ட அனைவரும் இயேசுவைப்பற்றின் நற்செய்தியை மற்றவர்களுக்கு சொல்லியாக வேண்டும். இதனால் இயேசுவின் நாமம் மகிமைப்படுவதுடன் ஆவிக்குரிய ஜீவியம் வெற்றியாய் இருக்கும்.

### விசுவாசம் என்னும் கேடகம். எபே 6:16

தேவன் பேரிலுள்ள விசுவாசமும், வசனமும், வசனத்தினால் செய்யும் விசுவாச அறிக்கையுமே உறுதியான கேடகம்.

### இரட்சணியம் என்னும் தலைச்சீரா. எபே 6:17

'இரட்சிக்கப்பட்டவன்' என்பது பேச்சு, நடக்கை, செயல் மூலம் நற்சாட்சியாய் உலகிற்கே தெரியவேண்டும். தலைக்கவசம் உயிர்கவசமாயிருப்பது போல ஆத்தும இரட்சிப்பு வாழ்கையே நித்தியம் வரை பாதுகாக்கும்.

## தேவ வசனம் என்னும் ஆவியின் பட்டயம். எபே 6:16

சாத்தானின் சோதனை கேள்விகளை இயேசு வசனமாகிய பட்டயத்தை கொண்டே முறியடித்தார். அது போலவே நாமும் பிசாசின் தந்திரங்களை வசனத்தால் முறியடிக்க வேண்டும்.

தேவனுக்கு கீழ்ப்படிந்து பிசாசுக்கு எதிர்த்து நின்று அவனை ஜெயிப்போம். தெளிந்த புத்தியுடன், விழித்திருந்து, விசுவாசத்தில் நிலைத்திருந்து பயமுறுத்தும் பிசாசை ஜெயிப்போம். தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

சபை செயலாளர்,
**சகோ.ஏசுரத்தினம்**

# தேவ செய்தி

## சோதனையில் வெற்றி

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்.( யாக்கோபு 1:12)

கர்த்தருடைய மகா பரிசுத்த நாமத்திற்கு மகிமையுண்டாவதாக! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! மீண்டுமாக தங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்!

ஆண்டவருடைய சிலுவைபாடுகளை தியானித்து கொண்டிருக்கும் இந்த நாட்களில் இந்த ஆண்டவரது வார்த்தை தங்களுக்கு மிகவும் பிரயோஜனம் உள்ளதாக இருக்கும் என்று காத்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

ஆண்டவரது சிலுவைபாடுகளை நாம் தியானித்து உபவாசித்து ஜெபத்தில் ஈடுபட்டு கொண்டிருக்கிற நமக்கு ஜெயத்தைவிட சோதனை அதிகமாக இருக்கலாம், சோர்ந்து போக வேண்டாம் இது அண்டவரால் அனுமதிக்கபட்டு சாத்தானால் வரும் சோதனையே தவிற வேறொன்றும் அல்ல.

சோதிப்பது சோதனைக்குள்ளாக்குவது என்பது ஆண்டவரது செயல் என்று உலகத்கத்தாரும் கூறுவதுண்டு . ஆண்டவரது நாமத்தை தொழுகிற நாம் தெரிந்து கொள்ளவேண்டியதும் இதுதான். சாத்தானும்

சோதிப்பான் எப்பொழுது என்று பார்த்தால் அவரது (ஆண்டவரது) அனுமதியோடு வரும் சோதனையே என்பது. எடுத்துகாட்டாக யோபு பக்தனின் வாழ்க்கையில் நடந்த சோதனை.ஆண்டவரால் அனுமதிக்கபட்டது, ஆண்டவரது நாமம் மகிமையடையும் படி. அந்த அளவுக்கு நாம் விசுவாசமுள்ளவாகளாக இருக்கிறோமா? ஆண்டவர் என்னை கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாய் இருப்பேன். அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; (யோபு 13:15) என்று யோபு சொல்கிறார்.சோதனை வேளையில் தேவன் நம்மோடு இருப்பார்.

யோபுடைய அனைத்து பொருளாதாரங்கள் சாத்தானால் அழிக்கபட்டது. இரத்த சொந்தங்கள் கொல்லப்படுகிறது.கொடுமையான பருக்களால் அவதி இரட்டுடடித்தி சாம்பலில் அமர்நது இருக்கிறார் அபரிய அளவிற்கு பருக்களின் தொல்லை இவை அனைத்தும் ஏன் என்றால் யோபு ஆண்டவரை மறுதலிக்க வேண்டும் என்பது.

ஒரு மனிதன் எப்படிபட்ட விசுவாசத்தில் இருந்தாலும் தன் பிள்ளைகளுக்கு ஒன்று என்றால் தன் நிலையில் இருந்து இறங்கிவிடுவான். தான் சம்பாதித்த பொருட்கள் அழிக்கபடும் நிலையில் தன் நிலையில் இருந்து இறங்கிவிடுவான். தன் உடலுக்கு ஒரு உபத்திரவம் என்றால் தன் நிலையில் இருந்து இறங்கிவிடுவான். இவைகள் அனைத்து உபத்திரவமும் சாத்தான் ஆண்டவரது அனுமதியுடன் யோபு பக்தனுக்கு கொடுக்கபட்டது. ஆனால் யோபு அவை அனைத்திலும் தன் நிலையில் இருந்து சற்றும் பின்வாங்க வில்லை ,பொருட்களும் பிள்ளைகளும் இழந்த பொழுது, கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் அவரது நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று தேவனுடைய நாமத்தை மகிமை படுத்தினார். (கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.(யோபு 1:21) அவரது விசுவாசத்தால் பலன் என்ன என்று பார்த்தால் முடிவில் இரட்டத்தைணயான ஆசீர்வாதம், இழந்ததை ஆண்டவர் அவருக்கு இரட்டத்தைணயாக திருப்பி கொடுக்கிறார். சோதனையில் வெற்றி இரட்டத்தைணயான ஆசீர்வாதம். ஆமென்!

அடுத்தபடியாக ஆண்டவர் ஆபிரகாமை சோதிக்கிறார் யோபு ஒரு வகை என்றால் விசுவாசத்தில் ஆபிரகாம் மற்றும் ஒரு வகை, யோபுவை சோதிக்க ஆண்டவர் சாத்தானுக்கு அனுமதி அளிக்கிறார், ஆபிரகாம் வாழ்க்கையில் தானே முன் நின்று அவரது விசுவாசத்தை சோதிக்கிறார். எப்படி எனில் யோபுடைய பிள்கைள் கொல்லபடுகிற செய்தி யோபுடைய காதால் கேட்கிறார். (வனாந்தர வழியாய்ப் பெருங்காற்று வந்து, அந்த

வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது பிள்ளைகளின்மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்து போனார்கள்(யோபு 1:19)என்று வேலைகாரர்கள் வந்து சொல்ல கேட்கிறார் ஆனால் விசுவாசத்தின் தந்தை என்று புகழப்படுகிற ஆபிரகாமின் வாழ்க்கையில் சோதனை என்னவென்று பார்த்தோமனால் 75 வயதில் ஆண்டவருடைய தூதரால் அருளப்பட்ட வார்தையின்படி அவருக்கு95 ஆம் வயதில் கிடைத்த புத்திரன் ஈசாக்கை ஆண்டவர் அவருக்கு பலியிட வேண்டும் என்று கேட்கிறார். எவ்வளவு பெரிய சோதனை அவர் ஒரு பெரிய செல்வந்தன் 300 வேலையாட்கள் கொண்டஒரு வீடு ஆனால் அதை சுதந்தரிக்க ஒரு வாரிசு இல்லாத நிலையில் ஆண்டவருடைய கிருபையால் வாரிசு கிடைக்கிறது ஆனால் அதையும் ஆண்டவர் தனக்கு பலியாக கொடுக்க வேண்டும் என்று சித்தம் கொள்கிறார், ஆபிரகாமின் மன நிலை எப்படி இருந்திருக்கும் சற்று சிந்தித்து பார்ப்போம், மனிதர்களுக்குள் அப்படி ஒரு நிலை வந்தால் அழுது புலம்பி ஆர்பாட்டம் செய்து கண்ணில்லையா மூக்கில்லையா வாயில்லையா என்று சொல்லி ஆண்டவருடைய நாமத்தை தூஷித்துவிடுவார்கள்.

ஆனால் ஆபிரகாமோ ஆண்டவருடைய கட்டளைக்கு அப்படியே கீழ்படிந்தார். தன்மனைவியிடமோ அல்லது பிள்ளையாண்டனிடமோ கூட சொல்லவில்லை பலியிட போகிறோம் என்று சொல்லி மகனை அழைத்துக் கொண்டு நிர்ணயிக்கபட்ட இடத்திற்கு செல்கிறார்.

பிள்ளையாண்டானோ! அப்பாவுக்கு தப்பாமல் பிறந்த பிள்ளை தன் தந்தையிடம் கேட்கிறார் ஈசாக்கு, அப்பாவை பார்த்து பலியிட வேண்டிய அனைத்து பொருட்களும் இருக்கிறது ஆட்டு குட்டி எங்கே தந்தையே என்று கேட்கிறார், அப்பாவோ ,ஆண்டவர் பார்த்து கொள்வார் என்றவுடன் மகன் மௌனம் காக்கிறார்.

நிர்ணயிக்கபட்ட இடம் வந்தது, பலிபீடம் ஆயத்தமாகிறது, ஆயத்தமானவுடன் தன் ஏகசுதன் தவமிருந்து கிடைத்த மகனை அதிலே கிடத்துகிறார். அரிவாளால் தன் மகனை வெட்ட முற்பட்டு கழுத்துக்கு கத்தி கொண்டு செல்லபடுகிறது, ஆண்டவரது சத்தம் கேட்கிறது ஆபிரகாமே நிறுத்து பிள்ளையாண்டான் மேல் உன் கையை போடாதே என்று.

பிரியமான சகோதரனே சகோதரியே ஆண்டவரின் வாத்தையை துளிகூட அடி பிசகாமல் அவர் வார்த்தையின்படி தன் மகனை ஆண்டவருக்கு பலிகொடுக்க ஆபிரகாம் சித்தமானார். அவர் விசுவாசம் எவ்வளவு பெரியது, சோதனை அதனிலும் பெரியதாக தெண்படவில்லை ஆபிரகாமிற்கு. ஆண்டவர் கேட்கிறார் அவர் கொடுத்ததை அவர்

கேட்கிறார் யோபுக்கு இருந்த அதே மனநிலையில்தான் ஆபிரகாமும் இருந்திருப்பார்.

பிரியமான சகோதரனே சகோதரியே! ஆபிரகாமை ஆண்டவர் சோதித்தார் அந்த சோதனையில் அவர் வெற்றி கண்டார். ஆண்டவருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்பு கொடுத்தார் இந்த சம்பவத்தை குறித்து நாம் ( ஆதியாகமம் 22 வசனம் 1ல் இருந்து 12 ஆம் வசனம்வரை வாசிக்கும் போது இதை குறித்து அறிந்து கொள்ளலாம்) அதன் பின் நடந்தது என்ன?

அன்பான தேவ ஜனமே தேவ சித்தம் செய்தால் என்ன ஆசீர்வாதம் என்று பார்த்தால், சோதனையில் இருந்து வெற்றி யோபுக்கு இரட்டத்தனையான ஆசீர்வாதம்,இங்கே ஆபிரகாமிற்கோ ஆண்டவரின் பெருத்த ஆசீர்வாதம் ஆபிரகாமின் சந்ததிகளை வானத்து நட்சத்திரங்களை போலவும் கடற்கரை மணலை போலவும் ஆசீர்வதித்து வாக்குத்தத்தம் செய்கிறார். அதுமாத்திரம் அல்ல, ஆண்டவரது சொல்லுக்கு கீழ்படிந்ததால் ஆபிரகாமின் சகல சாதிகளும் பூமியில் ஆசீர்வதிக்கபட ஆண்டவர் கட்டளையிடுகிறார்.

சோதனைக்கு பணிந்து அவரது சொல்லுக்கு கீழ்படிவதால் உண்டாகும் ஆசீாவாதம் நம் சந்ததிகள் பெருகும், அதுமாத்திரம் அல்ல சகல சாதிகளுக்கும் இந்த ஆசீர்வாதம் கிடைக்க தேவன் திருவுளம் பற்றினார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே சகோதரியே! யோபுவையும் , ஆபிரகாமையும் குறித்து அவர்கள் எப்படி சோதனையில் இருந்து வெற்றி கொண்டார்கள். அதனால் அவர்களுக்கு கிடைத்த ஆசீர்வாதங்கள் என்ன என்பதையும் தியானித்தோம்.

நமது வாழ்க்கையில் நம்மை சோதிக்க ஆண்டவர் திட்டமானால் நம் நிலை என்ன? பின்மாற்றமா? அல்லது ஆண்டவரது நாமம் தூஷிக்கிறவர்களாக இருப்பபோமா? நம்மை நாமே ஆராய்வோம்!

யாக்கோபு 1 :12 ல் வாசிக்கிறோம் சோதனையை சகிக்கிற மனிதன் பாக்கியவான் அவன் உத்தமனென்று விளங்கினபின் அவனுக்கு ஜீவ கிரீடம் அளிக்கபடும் என்பதை தேவன் வாக்குத்தத்தம் செய்கிறார் அதை சுதந்தரிப்பவர்களாக இலக்கை நோக்கி பயனிப்போம் அல்லேலுயா ! கர்த்தர் நம்மை ஆசிர்வதிப்பாராக ! ஆமென் !

..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்...(ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

Sis. மரிய குளோரி தாஸ்
Sis. தேவ கிருபை
Sis. கேத்ரீனா சுகன்யா
Sis. சஜின் ஜீவா ஃபிரான்கிளின்
செல்வி. ஹெலன் கிறிஸ்டோபர்
சகோ. ஜெபசிங்
சகோ.ஜெரேமியா
சகோ. ஸ்டீபன். T
செல்வி. அன்னாள் ஆசீர்வாதம்.
சகோ. ஜோன்ஸ் செல்வா சிங்
செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
Sis. எலிசபெத் ஸ்டாலின்
செல்வன். அஜாரியா பிரவீண் குமார்
செல்வி. அனாஸ்டினா கமலதாசன்
Sis.ஹெலன் ஷீஜா ராபின்
செல்வி. சித்ரா ராஜன்
Sis. ஜெயலஷ்மிகொம்மையன்
செல்வன். பால் சாமுவேல் தாமஸ்
சகோ. எபிநேசர்
Sis. பியூலா ஜெயக்குமார் ஞானதாஸ்
செல்வன்.ஜாஸ்வா ஷாஜின் ஹெக்கில்
செல்வன். டோனி ராமமூர்த்தி
சகோ. ஜோன்ஸ் ராஜ்
சகோ. கலியமூர்த்தி

சகோ. ராஜேந்திரன்
செல்வன். மில்டன் பக்தராஜ்
செல்வி. ரீமாறோஸ் எபெநேசர்
சகோ. சாமுவேல் தாசையா
Sis. தங்க மெல்பா தாசையா
செல்வன். எபின் பிரைஸ் கிருஸ்டோபர்
சகோ. தர்மர்
செல்வி. எவாஞ்சலின் சாமுவேல்
சகோ. கொமையன்
சகோ. ராஜவேல்
சகோ. ஜோஸ் யோசுவா
செல்வி. மீனா குமாரி சுகுமார்
Sis. குமதினி வில்ஸன்
செல்வன். ஏபெல் ராஜ் எபிநேசர்
செல்வி. மெர்ஸி தெபோரா ஆமோஸ்
சகோ. அந்தோணி சாமி
சகோ. விஜயன்
சகோ. ஞான சேகர்
Sis. எஸ்தர் சாம்
செல்வி. ஜோயல் ஹெக்கில்
சகோ. ஆசீர்வாதம்
Sis. சுகந்தி தம்புகுமார்
Sis. லதா ஹெக்கில்
செல்வன். கதிரவன் சுகுமார்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி /திரு. பெபிட் செல்பின்
திருமதி / திரு. எபிநேசர்
திருமதி / திரு. சுஜின்ஹெக்கில்
திருமதி / திரு. ஸ்டாலின்
திருமதி / திரு. வில்சன். M
திருமதி / திரு. எட்வின் சாம்
திருமதி / திரு. கிரன் குமார்
திருமதி / திரு. கிடியோன்
திருமதி / திரு.சுபின் சிங்
திருமதி / திரு. தாமஸ்

திருமதி / திரு. ஆன்டன்மைக்ககேல்
திருமதி / திரு. ஜோன்ஸ் ராஜ்
திருமதி / திரு. கொம்மையன்
திருமதி / திரு.ஆல்வின் ஜூலியஸ்
திருமதி / திரு.ஜாண் போஸ்கோ
திருமதி / திரு. எட்வர்ட் சந்தோஷ்
திருமதி / திரு. ஜெயசேகர்
திருமதி திரு. கிருஸ்டோபர் . M
திருமதி / திரு. வினீஷ்

# 2023 மே மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/05/2023 | சகோ.ஆரோக்கிய ராஜ் | சகோ.அசோக் குமார் |
| 14/05/2023 | சகோ.பிராங்கிளின் | சகோ.கிறிஸ்டோபர் தேவராஜ் |
| 21/05/2023 | சகோ.சுகுமார் | சகோ.சாம் ஆனந்து |
| 28/05/2023 | சகோ.கிறிஸ்டோபர் | சகோ.அருண் இம்மானுவேல் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/05/2023 | சகோ.ஜெகநாதன் | சகோ.ஏசுரெத்தினம் |
| 12/05/2023 | தாய்மார்கள் ஆராதனை | |
| 19/05/2023 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 26/05/2023 | சகோ.பிரசாத் | பாஸ்டர்.மனோவாரோஸ் |

**11/05/2023 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**20/05/2023 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை
(வேத வினா பகுதி–ரோமர்)
கூடுகையை பொறுப்பெடுத்து நடத்தும் குடும்பம்– சகோதரி.அல்ஜியா தாமஸ்

**26/05/2023 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை
(வேத வினா பகுதி– நியாயாதிபதிகள்)

# 2023 மே மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1.தானியேல் கற்றுக் கொண்ட புதிய பாஷை எது?

2.இஸ்ரவேல் ஜனங்கள் யாரிடத்தில் ஆலோசனை கேட்டதாக கர்த்தர் சொன்னார்?

3.இந்த இரண்டு இராஜாக்களின் இருதயமும் தீமை செய்ய நினைக்கும் யார் இவர்கள்?

4.ஆக்கிச்சூளை எத்தனை மடங்கு அதிகம் சூடாக்கப்பட்டது?

5.நட்ச்சத்திரங்கள் விழப்பண்ணியது எது?

6.கர்த்தர் சென்னபடி ஓசியா தனக்காக வாங்கி கொண்ட ஸ்திரியின் விலை என்ன?

7.காலையில் அக்கினி ஜுவாலையாய் எது எரியும்?

8.யூதாவின் வம்சத்துக்கு கர்த்தர் யாரை போல இருப்பார்?

9.எத்தனை காலமட்டும் ராஜா புல்லை மேய்ந்தான்?

10.கர்த்தர் எதை விரும்புகிறார்?

11.தானியேல் கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடாவின் அர்த்தம் என்ன?

12.என்னை விட்டு அலைந்து திரிந்தார்கள் என்று கர்த்தர் யாரை சொன்னார்?

13.நேபுகாத்நேச்சார் தானியேலுக்கு கொடுத்த பதவியின் பெயர் என்ன?

14.மறை பொருள்களை வெளிபடுத்துகிறவர் யார்?

15.ஓசியாவின் பிள்ளைகள் பெயர் என்ன?

**விடைகளை வருகின்ற** 20-05-2023**க்குள்**
(WhatsApp #**65040638**) **என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் தானியேல் 1–12, ஓசியா 1–7 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்.**

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2023 – ஏப்ரல் மாத வேத வினாவுக்கு விடை

1.கேருபீன்கள் (எசேக் 10:20)
2.இஸ்ரவேலின் அக்கிரமம் (எசேக் 18:30)
3.தீருவின் அதிபதி (எசேக் 28:3)
4. பாபிலோன் ராஜா (எசேக் 32:11)
5.யோசேப்பின் கோல், யூதாவின் கோல் (எசேக் 37:19)
6.எசேக்கியேல் (எசேக் 24:24)
7.எருசலேம் (எசேக் 16:46)
8. 25 புருஷன் (எசேக் 8:16)
9.தேசத்தை பாழாய்ப் போகப்பண்ணுவேன் (எசேக் 15:8)
10.சன்மார்க்கன், துன்மார்க்கன் (எசேக் 21:4)
11. தீரு (எசேக் 27:9-15)
12. தாவீது (எசேக் 34:23)
13.எருசலேமில் வடதிசைக்கு எதிரான உள்வாசலின் நடையில் (எசேக் 8:3)
14.பதாக்கன் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசி போயின (எசேக் 18:2)
15.பத்ரோஸ் (எசேக் 29:14)

## 2023– ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Sis.வனித்தா
Sis.ஜீனா சதீஷ்
Sis.சுபா ஸ்டீபன்
Sis.ஷீபா அருண்இம்மானுவேல்
Bro.ஆண்டனி
Bro.எட்வின்
Bro.பால்ராஜ்

# Kids Corner

## Share the love of Jesus!

Mary was the daughter of a missionary couple in India. She was born in India and lived there until she was six years old. When it was time for her to start school, her parents sent her back to America to live with her grandmother. Mary's grandmother was very kind to her and often told her Bible stories and did many things to make her happy.

As Mary learned to read and write, she would send letters back to her parents in India. They sent many letters to her, too, which she loved to receive.

One day when she was almost seven, she received a letter from her father. In it he included some money and a note which said, "You will soon be having your seventh birthday, Mary. I have enclosed some money for you to buy yourself a new Bible as your birthday gift."

"That's just what I wanted!" exclaimed Mary happily.

A few days later, on her birthday, Mary and her grandmother went to a bookstore. They looked at all the different kinds of Bibles. There were big ones and little ones, some had gold edges on the pages, and some had leather covers which cost more. It was hard to make a decision. After looking at them for almost fifteen minutes, Mary told the saleslady how much money she had and asked if it would buy two Bibles.

"Yes, it could," replied the saleslady, "but not the nice ones you're looking at."

Mary's grandmother heard this and asked, "Mary, why do you want two Bibles?"

"Because I want one for myself and one to send to a girl in India who is my age, so that she may learn about Jesus, too," answered Mary.

So Mary bought two Bibles. They didn't have gold-edged pages or soft, leather covers. But the saleslady told Mary, "The inside is just the same!"

As soon as Mary got home, she printed her name in one of them. Her grandmother helped her carefully wrap the second Bible to be sent with a letter to her parents. She thanked them for her Bible and asked them to please give the second Bible to a seven-year-old girl in India.

Mary read her Bible every day and learned more and more of the love of Jesus. She read in a letter from her father that the second Bible had been given to a seven-year-old girl, just as Mary had asked. Each day Mary prayed for her unknown friend in India, that she also might learn to know all about the love of Jesus and how He had died on the cross for her, too.

Many years later, after Mary finished going to school, she went back to India to be with her father and mother and to help them in their missionary work. Not long after she arrived, she met a young Indian girl and learned that she was a happy Christian.

"How did you learn about the Lord Jesus?" Mary asked her one day.

"When I was seven years old, I was given this Bible," answered the girl. "I read it and learned how the Lord Jesus loved me and died for me."

Mary had found her unknown friend! This was the seven-year-old girl who had received Mary's second Bible and for whom Mary had been praying all these years.

Do you have a Bible? If you will read it, you will learn about God's love and how He sent His only Son, the Lord Jesus, to die for your sins. Why not do what Mary did -- pass on God's

Word to others, so that they can learn of God's love and be saved.

***Prayer :*** Dear Lord, help me to share your love and your word to others. In Jesus' name I pray, Amen.

***Verse to memorise :***
Heaven and earth shall pass away, but My words shall not pass away.
- *Matthew 24:35*

## வாலிபர் பகுதி

### விசுவாசியின் வேர் விசுவாசம்

**கிறிஸ்துவின் பிரியமான தேவ ஜனமே உங்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.**
**இரட்சிக்கப்பட்ட உங்களுக்கும் எனக்கும் ஒவ்வொரு நாளும் துணையாயிருப்பது பிதாவாகிய தேவன் ஒருவர் தான். நம்முடைய எல்லா சூழ்நிலைகளையும் அவர் நன்றாக அறிந்தவர் அவருக்கு மறைவாக ஒன்றுமில்லை.**

**எதிராளி எப்பொழுதுமே தேவ பிள்ளைகளை அதிகமாக தொந்தரவு செய்வான் தேவ பிள்ளைகள் என்று சொல்வதைவிட யார் அவர் மேல் அசைக்கமுடியாத நம்பிக்கை, விசுவாசம் வைத்துள்ளார்களோ அவர்களுக்கு விரோதமாக செயல்படுவான்.**

**எதிராளியின் ஒரே நோக்கம் என்னவென்றால் நாம் தேவன் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தை அற்றுப்போக செய்வான்.**
**1பேதுரு 5:8,9 "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள்**

சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே".

ஏன் எதிராளி நம்முடைய விசுவாசத்தின் மேல் கைவைக்கிறான் என்றால் அவரவர்களின் விசுவாசத்தின்படிதான் தேவன் கிரியை செய்ய முடியும்.

எபிரேயர் 11:6 "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்."

எசேக்கியா ராஜாவின் விசுவாசமத்தேடல்:

அசீரியா ராஜாவாகிய சனகெரிப் எசேக்கியா ராஜாவை கலங்கப்பண்ணும் படியான செய்தியை அனுப்பினான்.

ஏசாயா 37:10,11 "நீங்கள் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்குச் சொல்லவேண்டியது என்னவென்றால், எருசலேம் அசீரியா ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை என்று நீ நம்பியிருக்கிற உன் தேவன் உன்னை எத்தவொட்டாதே. இதோ, அசீரியா ராஜாக்கள் சகல தேசங்களையும் சங்கரித்த செய்தியை நீ கேள்விப்பட்டிருக்கிறாய்; நீ தப்புவாயோ?"

இப்படிப்பட்ட துர்செய்திகளை கேட்ட எசேக்கியா மிகவும் பயந்தான் ஆனால் தான் விசுவாசிக்கும் தேவன் எல்லாவற்றிலும் பெரியவர் என்று உணர்ந்து அவன் தேவனுடைய சமூகத்திற்கு சென்று தேவனிடம் முறையிட்டான்.

எசேக்கியாவின் விசுவாசத்தின் நிமித்தம் அவனுடைய வேண்டுதலை தேவன் கேட்டு பதிலளித்தார்.

ஏசாயா 37:38 "அவன் தன் தேவனாகிய நிஸ்ரோகின் கோவிலிலே பணிந்து கொள்ளுகிறபோது, அவன் குமாரராகிய அத்ரமலேக்கும் சரேத்சேரும் அவனைப் பட்டயத்தினால் வெட்டிப்போட்டு, அரராத் தேசத்துக்குத் தப்பி ஓடிப்போனார்கள்; அவன் குமாரனாகிய எசரத்தோன் அவன் பட்டத்திற்கு வந்து அரசாண்டான்."

பிரியமானவர்களே நம்முடைய வாழ்விலும் இப்படிப்பட்ட அசீரியர்கள் வரலாம் சூழ்நிலைகள் எதிராய் மாறாலாம் ஆனாலும் நாம் நம்முடைய தேவன்மேல் வைத்திருக்கும் விசுவாசத்தின் அளவு குறையக் கூடாது.

1யோவான் 5:4 "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்."

நாம் நல்ல விசுவாசிகளாயிருப்போம் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம்.–ஆமென்.

## சகோதரிகள் பகுதி

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளுக்கு நம் இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

நீதி 12:4ல் 'குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்;' என்று பார்க்கின்றோம்.

கிரீடம் ஒரு ராஜாவின் அடையாளம். கூட்டத்தில் ஒரு மனிதனிடம் கிரீடம் காணப்படும்போது எல்லாரும் அறிந்து கொள்வார்கள் இவர் ராஜா; கனத்திற்கும் அதிகாரத்திற்கும் உரியவர் என்று. அதே போல குணசாலியான ஸ்திரி தன் கணவருக்கு கீரீடம் போலானதால் அந்த மனிதன் கனத்திறகுரியவர் என்ற அடையாளமாக தேவன் நம்மை வைத்திருப்பது எத்தனை மேன்மை. கிரீடமாகிய நாம் அலங்காரமான கிரீடமாக மாறுவது கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும் உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்.

நாம் அவர் கரத்தில் என்றும் இருப்பதில் கண்ணோக்கமாக இருக்கும்போது நம்மை அலங்காரமான கிரீடமாக மாற்றி அதன்மூலம் கணவரும் கனத்தையும் மேன்மேலும் ஆசீர்வாதங்களைப் பெறவும் தேவன் செய்வார்.

தேவனுடைய கரத்தில் இருப்பதை விட பாதுகாப்பான மேன்மையான விலைமதிப்பான இடம் வேறு எங்குமில்லை. அவர் கரத்தில் என்றும் இருக்க கர்த்தர் உதவி செய்வாராக!

அதே போல நீதி 12:4 பிற்பகுதியில் பார்க்கின்றோம் 'இலச்சை உண்டு பண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்.' வார்த்தையினாலேயோ செயல்களினாலேயோ இலச்சையை உண்டு பண்ணும் பெண்ணாக இருந்துவிடக் கூடாது என தேவனிடம் ஜெபிப்போம். சூழ்நிலையின் காரணமாகவோ கோபத்திலோ விரக்தியிலோ அப்படி நடந்திருந்தால் தேவனிடம் தயவாக மன்னிப்பு கேட்டு அவர் கரத்தில் மீண்டும் எடுத்து கீரிடமாக மாற்ற நம்மை அர்ப்பணிப்போம்.
கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!

கர்த்தரின் பணியில்,
**சகோதரி. அனித்தா ராஜ்**

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில




















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

**சகோ. ஜெயசேகர்**

*96646444*

செயலாளர்

**சகோ. இயேசு ரெத்தினம்**

*23924262 - 97545812*

பொருளாளர்

**சகோ. ஜெகநாதன்**

*66889535 - 98852812*

பெண்கள் ஐக்கிய தலைவி

**சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்**

*67792009 - 56640551*

வாலிப ஐக்கிய தலைவர்

**சகோ. பிரசாத் சுந்தரேசன்**

*60781168*

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only